# பாடம் 57: ஏழைகளுக்கான அக்கறை

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடங்களில், கத்தோலிக்க வாழ்வு வாழ்வதற்குத் தடையான அறநெறி பிரச்சனைகள் குறித்து நாம் கற்றோம். மற்ற மக்களுடனான நமது உறவுநிலைகளில் கற்புடன் இருக்கவும், திருமணம் மற்றும் குடும்பத்தின் புனிதத்துவத்தை நிலைநாட்டவும், கடவுளின் கொடையாகிய நமது சொந்த பாலினம் மற்றும் பாலினத்தன்மையைப் பாராட்டவும், மனித வாழ்வின் உள்ளியல்பான மாண்பை எப்பொழுதும் நிலைநாட்டவும் நமக்கு அறநெறி வாழ்வு தேவை என்பதை தற்போது அறிந்திருக்கிறோம். இந்த பாடத்தில், ஏழ்மையில் இருக்கிறவர்கள் மீதான நமது பொறுப்புணர்வு பற்றி நாம் பேசுவோம், ஏனெனில் ஏழ்மையால் பாதிக்கப்பட்டவர்கள் மீது கடவுள் சிறப்பான அக்கறை கொண்டுள்ளார்.

**தற்போதைய பாடம்:**

1. கடவுள் முதலில் உலகைப் படைத்த பொழுது, அதனில் அடங்கியிருந்த அனைத்தும் மனித இனத்தவர் எல்லாராலும் சமமாகப் பகிரப்பட வேண்டும், அதனால் ஒவ்வொருவரின் தேவைகளும் சரியாக நிறைவு செய்யப்பட்டு, எவரும் பற்றாகுறையால் துன்புறக்கூடாது என்பதற்காக இருந்தது. எனினும், படைத்தவரிடம் இருந்து வந்த இந்த கொடைகள் மனிதர்கள் நடுவே சமமற்ற முறையில் பகிரப்பட்டதால் பல மக்கள் தீவிர பற்றாக்குறையால் துன்புற நேரிட்டது.

*கதிம 2402*: “தொடக்கத்தில் கடவுள் மண்ணகத்தையும் அதன் வளங்களையும், அவற்றைக் கவனித்துக் கொள்ளவும், உழைப்பால் அவற்றை ஆண்டுநடத்தவும், அவற்றின் கனிகளை அனுபவிக்கவும் மனிதகுலத்தின் பொது பொறுப்பில் ஒப்படைத்தார். படைப்பு பொருட்கள் முழு மனித இனத்திற்காக விதிக்கப்பட்டுள்ளன. எனினும், ஏழ்மை பாதிக்காமலும் வன்முறை அச்சுறுத்தாமலும், மனிதர்களது வாழ்வின் பாதுகாப்பை உறுதிசெய்ய அவர்கள் நடுவே நிலம் பிரிக்கப்பட்டுள்ளது. தனிநபர்களின் சுதந்திரம் மற்றும் மாண்பை உறுதிப்படுத்தவும், அவர்கள் ஒவ்வொருவரும் தமது அடிப்படைத் தேவைகள் மற்றும் அவரது பொறுப்பில் உள்ளோரின் தேவைகளை அடைய உதவவும் உடைமையைக் கொண்டிருப்பது சட்டப்பூர்வமானது. மனிதரிடையே இயல்பான ஒத்துணர்வை வளர்க்க அது அனுமதிக்கப்பட வேண்டும்.”

2. பழைய ஏற்பாட்டில் இருந்தே, ஏழைகள் மீதான கடவுளின் அக்கறையை ஏற்கெனவே புனித மறைநூல் பிரதிபலிக்கிறது. முற்கால இஸ்ரயேலருக்கு வழங்கப்பட்ட சட்டங்களில், அவர்கள் தங்கள் நடுவே உள்ள ஏழைகள் மீது அக்கறை கொள்ள அவர் ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளார் (எ.கா. இணைச்சட்டம் 15:4,7-8,11). அவர்களிடம் அவர் அனுப்பிய இறைவாக்கினர்கள் வழியாக, ஏழைகளின் புறக்கணிப்புக்காக இஸ்ரயேலர் தண்டிக்கப்பட்டனர் (எசா 3:13-15).

*விடுதலைப்பயணம் 22:21-26*: "அந்நியருக்கு நீ தொல்லையோ அல்லது கொடுமையோ இழைக்காதே, ஏனெனில் நீங்கள்தாமே ஒருகாலத்தில் எகிப்தில் அந்நியராய் இருந்தீர்கள். கைம்பெண்களுக்கோ அனாதைகளுக்கோ தீங்கிழைக்காதே; நீங்கள் எவ்விதத்திலாவது அவர்களுக்குத் தீங்கிழைத்து, உதவிக்காக அவர்கள் என்னிடம் முறையிட்டால், நான் உறுதியாக அவர்கள் முறையீட்டுக்கு செவிசாய்ப்பேன், என் சினம் பற்றியெரியும், நான் உங்களை வாளுக்கு இரையாக்குவேன்; உங்கள் மனைவியர் விதவைகளாகவும், உங்கள் பிள்ளைகள் அனாதைகளாகவும் ஆவர். உங்கள் நடுவே உள்ள என் மக்களில் ஏழை ஒருவருக்கு நீ பணம் கடன் கொடுத்தால் அவரது தண்டல்காரன் ஆகாதே: நீ அவரிடம் வட்டி வாங்காதே. நீ ஒருவரது மேலாடையை அடகாக வாங்கினால், கதிரவன் மறையுமுன் அதை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிடு. அது ஒன்றே அவர் கொண்டுள்ள போர்வை; அவரது உடலை மூடும் மேலாடையும் அதுவே; வேறு எதில்தான் அவர் படுத்து உறங்குவார்? அவர் என்னிடம் முறையிட்டால், நான் செவிமடுப்பேன். என்னிடமாவது அவர் பரிவிரக்கத்தைக் கண்டடைவார்!"

3. உண்மையில், இஸ்ரயேலர் ஏழைகளை நடத்திய விதத்தைக் கொண்டு தம்மிடம் அவர்கள் கொண்டுள்ள நம்பகத்தன்மையை கடவுள் தீர்மானிக்கிறார். கடவுளைப் பொருத்தவரை, இஸ்ரயேல் மக்கள் ஏழைகளுக்கு "நன்மைகள் செய்வதற்கு" கடமைப்பட்டவர்கள் மட்டுமல்ல; மாறாக, அவர்கள் ஏழைகளுக்கு *நீதியும்* வழங்க வேண்டியவர்கள். ஏழைகள் தருமமும் தாராளமும் பெறுகின்றவர்களாக அவரால் பார்க்கப்படவில்லை. கடவுளின் ஏழைகளிடம் அக்கறை செலுத்துவது இஸ்ரயேலர் கடவுளுக்குச் செய்யும் ஒரு கடமையாகவும், அவரிடமான தங்கள் நம்பகத்தின் ஓர் அடையாளமாகவும் இருக்கிறது. கடவுளைப் பொருத்தவரை, நீதியின் வழியாக நேர்மையானது எண்பிக்கப்பட வேண்டும். மக்கள் ஏழைகளைப் புறக்கணிக்கும் பொழுது, அவர்கள் கடவுளுக்கு நம்பகமான அவரது மக்களாக இருக்க விரும்பவில்லை என்பதன் உறுதியான அடையாளமாக அது இருக்கிறது. ஏழைகளை மறத்தல் என்பது தங்கள் நலனுக்காகத் தொடர்ந்து கவலைப்படும் மக்களின் கடவுளாக இருக்கிறார் என்பதை புறக்கணிப்பதாகும்.

4. நற்செய்திகளில், ஏழைகளை நோக்கிய அதே இறை மனப்பாங்கை இயேசு தொடர்வதை நாம் காண்கிறோம். அவரது மிக முக்கியமான மற்றும் விரிவான மூன்று உவமைகளில் ஏழைகளும் ஆதரவற்றோரும் எவ்விதம் நடத்தப்படுகின்றனர் என்பதைச் சார்ந்துள்ளன: நல்ல சமாரியர் உவமை (லூக்கா 10), பணக்காரரும் இலாசரும் உவமை (லூக்கா 16), மற்றும் இறுதித் தீர்ப்பு (மத்தேயு 25). இந்த உவமைகளில், இயேசு தெளிவாக தம்மை ஏழைகளோடு அடையாளப்படுத்திக் கொள்வதை நாம் காணலாம், மேலும் அவர் சமூகத்தை ஏழைகள் மீதான அக்கறையின் அடிப்படையிலேயே தீர்ப்பிடுகிறார்.

*திருச்சபையின் சமூகக் கோட்பாட்டின் சுருக்கம், 325*: "இயேசு பழைய ஏற்பாட்டின் முழு மரபையும், பொருளாதார நலன்கள் சார்ந்தவற்றைக் கூட எடுத்துக் கொண்டு, செல்வம் மற்றும் ஏழ்மை குறித்த பெரும் தெளிவையும் முழுமையையும் அவர் வழங்கினார் (காண். மத் 6:24,

13:22; லூக் 6:20-24, 12:15-21; உரோமை 14:6-8; 1திமொ 4:4). தமது ஆவியாரின் கொடை மற்றும் இதயங்களின் மனமாற்றம் வழியாக, 'கடவுளின் அரசை' நிறுவிட அவர் வந்தார், அதனால் நீதி, சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் பகிர்தலில், ஒரு புதிய நடத்தையுள்ள சமூக வாழ்வு சாத்தியமானது. கிறிஸ்துவால் தொடங்கப்பட்ட அரசானது பாவத்திற்கு உட்பட்ட படைப்பின் ஒழுங்கு மற்றும் மனிதச் செயல்பாட்டின் உண்மை நன்மையை நிறைவாக்கியது. தீமையில் இருந்து விடுபட்டு, கடவுளுடனான ஒன்றிப்பில் மீண்டும் வைக்கப்பட்டவராய், மனிதர் இயேசுவின் பணியை, அவரது ஆவியாரின் உதவியோடு தொடர இயலுகின்றது. இதில், ஏழைகளுக்கு நீதி செய்யும், ஒடுக்கப்பட்டோரை விடுவிக்கும், பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் வழங்கும், பொருள்சார் ஏழ்மைக்குத் தேவைப்படும் தீர்வுகளை வழங்குகிறதும் அவல மற்றும் அடிமைத்தன நிலைகளில் இருந்து தங்களை விடுவிக்கும் வலுவற்றோரின் முயற்சிகளின் குறுக்கே நிற்கும் சக்திகளைக் கட்டுப்படுத்துவதுமான ஒரு புதிய சமூக ஒழுங்கை தீவிரமாகத் தேட மனிதர் அழைக்கப்படுகிறார். இது நிகழும் பொழுது, அது மண்ணகத்தைச் சார்ந்ததாக இல்லை எனினும், கடவுளின் அரசு ஏற்கனவே இந்த மண்ணகத்தில் இருக்கிறது. இந்த அரசிலேயே இறைவாக்கினர்களின் வாக்குறுதிகள் இறுதியாக நிறைவடைகின்றன.''

*மத்தேயு 25:33-46*: ''அவர் செம்மறியாடுகளை வலது பக்கத்திலும், வெள்ளாடுகளை இடது பக்கத்திலும் நிறுத்துவார். பின்பு அரசர் தமது வலது பக்கத்தில் உள்ளோரிடம் கூறுவார்: 'என் தந்தையிடம் ஆசி பெற்றவர்களே, வாருங்கள், உலகிற்கு அடித்தளமிட்டதில் இருந்து உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அரசை உங்கள் உரிமைப்பேறாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு தந்தீர்கள்; நான் தாகமாய் இருந்தேன், நீங்கள் எனக்கு குடிக்கத் தந்தீர்கள்; நான் அந்நியனாய் இருந்தேன், நீங்கள் என்னை வரவேற்றீர்கள்; ஆடையின்றி இருந்தேன் நீங்கள் என்னை உடுத்தினீர்கள்; நோயுற்று இருந்தேன், நீங்கள் என்னை சந்தித்தீர்கள்; சிறையில் இருந்தேன், நீங்கள் என்னைப் பார்க்க வந்தீர்கள்' என்பார். பின்பு நேர்மையாளர்கள் அவரிடம் பதில்மொழியாக, 'ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்கு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமக்கு குடிக்கத் தந்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மை வரவேற்றோம், ஆடையற்றவராகக் கண்டு உம்மை உடுத்தினோம்? எப்பொழுது உம்மை நோயுற்றவராக அல்லது சிறையில் கண்டு உம்மைப் பார்க்க வந்தோம்?' என்று கூறுவர். அதற்கு அரசர், 'மிகச் சிறியோராகிய என் சகோதரரில் ஒருவருக்கு நீங்கள் செய்த போதெல்லாம், நீங்கள் எனக்கே செய்தீர்கள் என உண்மையில் நான் உங்களுக்குச் சொல்கிறேன்' எனப் பதிலளிப்பார். பின்பு அவர் இடது பக்கத்தில் உள்ளோரிடம், 'சபிக்கப்பட்டவர்களே, என்னிடம் இருந்து அகன்று, அலகைக்கும் அதன் தூதர்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற நித்திய நெருப்புக்குச் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் ஒருபோதும் எனக்கு உணவு தரவில்லை; நான் தாகமாய் இருந்தேன், நீங்கள் ஒருபோதும் எனக்கு குடிக்கத் தரவில்லை; நான் அந்நியனாய் இருந்தேன், நீங்கள் ஒருபோதும் என்னை வரவேற்கவில்லை; ஆடையின்றி இருந்தேன் நீங்கள் ஒருபோதும் என்னை உடுத்தவில்லை; நோயுற்றும் சிறையிலும் இருந்தேன், நீங்கள் ஒருபோதும் என்னைச்

சந்திக்கவில்லை' என்பார். பின்பு அவர்கள் அவரிடம், 'ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராக அல்லது தாகமுள்ளவராக, அந்நியராக அல்லது ஆடையற்றவராக, நோயுற்றவராக அல்லது சிறையில் கண்டு, உமது உதவிக்கு வராமல் இருந்தோம்?' என்று கேட்பர். அதற்கு அவர், 'மிகச் சிறியோராகிய என் சகோதரரில் ஒருவருக்கு நீங்கள் செய்யாமல் புறக்கணித்த போதெல்லாம், நீங்கள் எனக்கே செய்யாமல் புறக்கணித்தீர்கள் என உண்மையில் நான் உங்களுக்குச் சொல்கிறேன்' எனப் பதிலளிப்பார். மேலும் அவர்கள் நித்திய தண்டனையும், நேர்மையாளர்கள் நித்திய வாழ்வும் பெறச் செல்வார்கள்.''

*எவாஞ்செலீ கவ்தியும்*, 197: ''கடவுளின் இதயம் ஏழைகளுக்காக ஒரு சிறப்பான இடத்தைக் கொண்டுள்ளது, அதனாலேயே அவர் தாமே 'ஏழையானார்' (2கொரி 8:9). நமது மீட்பின் முழு வரலாறும் ஏழைகளின் இருப்பினால் குறிக்கப்பட்டுள்ளது. பெரும் பேரரசின் விளிம்பில் இருந்த ஒரு சிறிய ஊரில் வாழ்ந்த ஒரு எளிய பெண்ணால் கூறப்பட்ட 'ஆம்' என்பதில் இருந்து நமக்கு மீட்பு வந்தது. ஏழைக் குடும்பங்களின் குழந்தைகளைப் போன்று, விலங்குகள் நடுவில், ஓர் எளியக் குடிலில் மீட்பர் பிறந்தார்; ஆட்டுக்குட்டியை காணிக்கை செலுத்த முடியாதோர் கொடுக்கும் இரண்டு மாடப்புறாக்களோடு அவர் கோயிலில் அர்ப்பணிக்கப்பட்டார் (காண். லூக் 2:24; லேவி 5:7); அவர் சாதாரண தொழிலாளர் வீட்டில் வளர்க்கப்பட்டார், தமது உணவுக்காக தமது சொந்த கரங்களால் உழைத்தார். அவர் இறையரசு குறித்து போதிக்கத் தொடங்கிய பொழுது, அவரது வார்த்தைகளைச் சித்தரிக்கும், உடைமையற்றோரின் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது: 'ஆண்டவரின் ஆவி என்மேல் உளது, ஏனெனில் ஏழைகளுக்கு நற்செய்தி போதிக்க அவர் என்னைத் திருப்பொழிவு செய்துள்ளார்' (லூக் 4:18). வருத்தத்தால் துன்புற்றோர் மற்றும் ஏழ்மையால் நசுக்கப்பட்டோருக்கு கடவுள் தமது இதயத்தில் சிறப்பான இடம் கொண்டுள்ளதாக அவர் உறுதியளித்தார்: 'ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர், கடவுளின் அரசு உங்களுக்குரியது' (லூக் 6:20); அவர் தம்மை அவர்களில் ஒருவராக்கிக் கொண்டார்: 'நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு தந்தீர்கள்', மேலும் இவர்கள் எல்லார் மீதான இரக்கமே விண்ணகத்தின் திறவுகோல் என அவர் கற்பித்தார் (காண். மத் 25:5).''

5. ஒவ்வொரு மனித நபரும் மாண்புடன் நடத்தப்பட உரிமை கொண்டுள்ளார் என தூய கத்தோலிக்க திருச்சபை கற்பிப்பதால், மனித மாண்பை உயர்த்திப் பிடிக்கும் விதத்தில் சமூகம் எப்பொழுதும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். மக்களை ஏழைகளாக குறைவுள்ளோராக வைத்திருந்து மனித மாண்பில் சமரசம் செய்யும் சமூகத்தில் உள்ள சமூக-பொருளாதார முறைமைகள் நீதியற்றவையாகக் கருதப்பட்டு மாற்றப்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

*எவாஞ்செலீ கவ்தியும்*, 53: '''கொலை செய்யாதிருப்பாயாக' எனும் கட்டளை மனித வாழ்வின் மதிப்பைப் பாதுகாக்கும் வரம்பை நிர்ணயிக்கிறது போல, புறந்தள்ளுகிற சமத்துவமற்றப் பொருளாதாரத்தை 'செய்யாதிருப்பாயாக' என இன்று நாம் சொல்ல வேண்டியுள்ளது.

அத்தகைய ஒரு பொருளாதாரம் கொல்கிறது. வீடற்ற முதியவர் திறந்தவெளியில் இறக்கிறது செய்தி ஆகாதிருக்கும்போது, பங்குச் சந்தை இரண்டு புள்ளிகள் சரியும் பொழுது செய்தியாக மாறுவது எப்படி? இது ஓர் ஒதுக்கலாக இருக்கிறது. மக்கள் பசியாக இருக்கும் வேளையில் உணவு வீணாக்கப்படுவதை நாம் தொடர்ந்து அனுமதிக்க முடியுமா? இது சமத்துவமற்ற ஒன்றாக இருக்கிறது. இன்று அனைத்தும் போட்டி விதிகள் மற்றும் தக்கது பிழைத்தலின் கீழ் வருகின்றன, இங்கு வலுவற்றோருடையதை வலுவுள்ளோர் உண்கின்றனர். அதன் விளைவாக, பெருமளவு மக்கள் தங்களை ஒதுக்கப்பட்டோராக மற்றும் விளிம்புநிலையினராகக் காண்கின்றனர்: வேலையின்றி, வாய்ப்புகளின்றி, தப்பிக்க எந்த வழியுமின்றி உள்ளனர். மனிதர்கள் தங்களையே பயன்படுத்தி, வீசியெறியப்படும் நுகர்வுப் பொருட்களாக கருதுகின்றனர். நாம் ‘வீசியெறியும்’ கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளோம், அது தற்போது பரவிக் கொண்டிருக்கிறது. இது ஒருபோதும் வெறுமனே சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் பற்றியதன்று, மாறாக ஏதோ புதிதானது. இறுதியாக நாம் வாழும் சமூகத்தின் ஒரு பகுதியில் ஒதுக்குதல் நிகழ்கிறது; அந்த ஒதுக்கப்பட்டோர் ஒருபோதும் சமூகத்தின் கீழ்ப்பகுதியில் அல்லது அதன் விளிம்புகளில் அல்லது அதன் உரிமைநிலையில் இருப்பதில்லை – அவர்கள் ஒருபோதும் அதன் பகுதியாகக் கூட இருப்பதில்லை. ஒதுக்கப்பட்டோர் என்போர் ‘சுரண்டலுக்கு ஆளானோர்’ அல்லர், மாறாக வெளித்தள்ளப்பட்ட ‘எஞ்சியோர்’ ஆவர்.’’

6. படைப்பு எல்லாம் இறைவனால் முழு மனிதருக்கும் வழங்கப்பட்டுள்ளது, அதனால் அதிலிருந்து வரும் வளங்கள் சமமாகப் பகிரப்பட முடியும். படைப்பின் வளங்களுக்கு எல்லா மக்களும் சமமான அணுகுரிமை கொண்டிருக்கும் பொழுது, மனிதரில் உரிமைப்பேறாக வரும் கடவுள் வழங்கிய மாண்புடன் ஒவ்வொரு மனிதரும் வாழ இயலும். ஒவ்வொரு மனிதரின் அடிப்படைத் தேவைகளைச் சந்திக்க மட்டுமே படைப்பின் வளங்கள் வழங்கப்படவில்லை, மாறாக மனிதரின் திறனை நிறைவு செய்யவும் வழங்கப்பட்டுள்ளன.

*கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 26: ‘‘மனித நபர்களின் விழுப்ப மாண்பு குறித்த விழிப்புணர்வு வளர்ந்து வருகிறது, அவர்கள் எல்லா பொருட்களுக்கும் மேலாக நிற்கின்றனர் மற்றும் அவர்களின் உரிமைகளும் கடமைகளும் உலகளாவியதும் மீறத்தகாதவையுமாக உள்ளன. ஆகவே, உண்மை மனித வாழ்வு வாழத் தேவையான எல்லாவற்றுக்குமான அணுகுரிமை அவர்களுக்கு வேண்டும்: எடுத்துக்காட்டாக, உணவு, உடை, இருப்பிடம்,.. கல்வியுரிமை மற்றும் வேலை.’’

7. ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் வளங்களை உடைமையாக வைத்திருக்க உரிமை கொண்டுள்ளனர். எனினும், அது ஒரு முழுநிலை உரிமையன்று. வளங்களின் உரிமைத்துவம் எப்பொழுதும் சமூகத்தின் பொது நலனுக்கு எழுச்சியூட்டுகிறது. தனியார் உடைமையான வளங்கள் பகிரப்படும் தருணங்களும் உள்ளன, சிறப்பாக ஒருவர் தமது தேவைக்கு அதிகமான வளங்களை வைத்திருக்கும் பொழுது என்பதே இதன் பொருள். இந்த வளங்களில் இருந்து தங்களது சரியான பங்கைப் பெறாததால் இந்த சமூகத்தில் தொடர்ந்து ஏழைகளாக

வாழும் மக்கள் இருக்கின்றனர், ஏனெனில் வளங்களைச் சமமாகப் பகிரும் விதியை மீறும் வகையில் இச்சமூகம் பெரிதும் செயல்படுகின்றது.

*கதிம 2403*: “*தனியாருக்கான சொத்துரிமை*, முழு மனித இனத்துக்கும் மண்ணகம் வழங்கும் உண்மைக் கொடையில் இருந்து நீதியான முறையில் பெறப்படுகிறது. *பொருட்களின் உலகளாவிய விதி* தொடர்ந்து அடிப்படையாக உள்ளது, பொது நலனின் முன்னேற்றத்துக்கு தனியார் சொத்துரிமையும் அதன் செயலாக்கமும் தேவைப்படுகின்றன.”

*கதிம 2404*: “‘மனிதர் தமக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் பொதுவான சட்டப்படி தமக்கு சொந்தமற்ற பொருட்களை, தம்மைப் போல் பிறரும் பயனடைய வேண்டும் என்ற உணர்வில் பயன்படுத்த வேண்டும்.’ எந்த பொருளின் மீதான உரிமைத்துவமும் அதை வைத்துள்ளவரை, அதைப் பயனுள்ளதாக்கி, அதன் பயன்களை மற்றவர்களுக்கும், முதலில் தமது குடும்பம் முழுவதற்கும் வழங்கும் அலுவலுடன் கூடிய ஒரு பாதுகாக்கும் பொறுப்பாளராக ஆக்குகிறது.

8. சமூகத்தில், ஏழைகளாக இருக்கிற மக்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, மதிப்பற்றோராகவும் வலுவற்றோராகவும் இருக்கின்றனர். ஒத்துணர்வுடன் அவர்கள் பக்கம் நிற்க திருச்சபை நம் எல்லாரையும் அழைக்கிறது. அவர்களின் பொருள்சார் ஏழ்மையைக் கருத்தில் கொண்டு “தருமம் வழங்குவதற்கு” மட்டுமின்றி, அதற்கும் மேலாக மற்ற ஒவ்வொருவரையும் போல் அவர்களும் மனிதர்களாக மாண்புடன் நடத்தப்படும் அவர்கள் உரிமையை மதிக்கவும் நாம் இதைச் செய்ய வேண்டும். அவர்களுடன் ஒத்துணர்வில் நிற்றல் என்பது, ஏழைகள் தங்களது மனிதத் திறன்களை அடையவிடாமல் தடுக்கும் சமூக, பொருளாதார, பண்பாட்டு, மற்றும் சூழல்சார் பிரச்சனைகளை எதிர்கொண்டு, சமூகத்தின் பொது நன்மையை உயர்த்த நாம் உழைக்கிறதாகும். ஒத்துணர்வு என்பது பொருள்சார் தேவைகளை வழங்குவதற்கும் மேலானது, அதற்கு ஏழைகளை முழு மனிதர்களாக அன்பு செய்வதும், அவர்களின் ஒட்டுமொத்த நலனை விரும்புவதும் நமக்கு தேவைப்படுகிறது.

9. ஏழ்மையில் உள்ளவர்களை இச்சமூகம் பெரிதும் கண்டுகொள்ளாமல் இருக்கிறதால், *ஏழைகளுக்கு முன்னுரிமை* அளிக்க திருச்சபை நம்மை அழைக்கிறது, நாம் எப்பொழுதும் உள்நோக்குடன் ஏழைகள் பக்கம் நிற்க வேண்டும் என்பதே இதன் பொருள். ஏழைகளிடம் இந்த மனப்பாங்கை கடவுள் கடைபிடித்ததை புனித மறைநூல் காட்டுகிறது: அவர்களை அன்பு செய்தல், அவர்களைப் பாதுகாத்தல், மற்றும் அவர்கள் சார்பில் பேசுதல். ஏழைகளின் பாலான அதே மனப்பாங்கைத் தழுவுதலில், அவர்களைத் தமது சொந்த உருவிலும் சாயலிலும் படைத்த கடவுளை நாம் பெருமைப்படுத்துகிறோம்.

*நீதிமொழிகள் 14:31*: “வலுவற்றவரை ஒடுக்குகிறவர் படைத்தவரை இகழ்கிறார், வறியவருக்கு இரங்குகிறவர் படைத்தவரைப் பெருமைப்படுத்துகிறார்.”

*கதிம 1938*: “நிலவுகின்ற பாவம்நிறை சமத்துவமின்மைகள் லட்சக்கணக்கான ஆண்களையும் பெண்களையும் பாதிக்கின்றன. இவை வெளிப்படையாக நற்செய்திக்கு முரண்படுகின்றன: ஆட்கள் என்ற முறையில் அவர்களின் சமமான மாண்பின் சரியான மனித நிலைகளுக்காக நாம் போராடுகிறோம். ஒரே மனித இனத்தின் தனிநபர்களுக்கும் மக்களுக்கும் இடையே பொருளாதாரத்திலும் சமூகத்திலும் நிலவும் மிகையான ஏற்றத்தாழ்வே சமூக நீதி, நேர்மை, மனித மாண்பு, மேலும் சமூக மற்றும் நாடுகளிடை அமைதிக்கு எதிரான அவதூறுகள் மற்றும் ஒவ்வாமைகளின் ஆதாரமாக இருக்கிறது.”

*திச §2*: “அவர்கள் (கிறிஸ்தவ விசுவாசிகள்) சமூக நீதியை வளர்க்கவும், ஆண்டவரின் நியமத்தைக் கருத்தில் கொண்டு தமது சொந்த வளங்களில் இருந்து ஏழைகளுக்கு உதவவும் கடமைப்பட்டுள்ளனர்.”

*எவாஞ்செலீ கவ்தியும்*, 187: “ஒவ்வொரு கிறிஸ்தவத் தனிநபரும் ஒவ்வொரு குழுமமும், ஏழைகளின் முன்னேற்றம் மற்றும் விடுதலையில் கடவுளின் கருவியாக இருக்கவும், அவர்களை சமூகத்தின் முழுமையான உறுப்பினராக ஆக்கவும் அழைக்கப்படுகின்றனர். இதற்கு நாம் ஏழைகளின் கூக்குரலுக்குக் கவனமாய் செவிமடுப்பதும், அவர்களின் உதவிக்கு வருவதும் தேவையாகிறது. ஏழைகளின் கூக்குரலைக் கேட்க நமது இரக்கமுள்ள தந்தை எப்படி விரும்புகிறார் என்பதைக் காண மறைநூல்களை மேலோட்டமாகப் பார்வையிடலே நமக்குப் போதுமானது...”

*எவாஞ்செலீ கவ்தியும்*, 199: “ஏழைகளுக்கு முன்னுரிமை அளிக்காமல், ‘நற்செய்தி அறிவித்தல், பிறரன்பின் முதன்மை வடிவமான அதையே, தவறாகப் புரிந்துகொள்ளும் அல்லது அமிழ்த்தும் ஆபத்தாகிறது...’”

வெளிப்படையாக, நமது தனிப்பட்ட வாழ்விலும் திருச்சகை குழுமங்களாகவும் எடுக்கின்ற எல்லா முடிவுகளிலும், பிற்சிந்தனையாக அன்றி, மாறாக முதன்மை இடத்தில் நாம் ஏழைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும். இது ஏழைகளுக்கு நாம் கொடுக்கும் முன்னுரிமை அன்று, மாறாக அவர்களுக்குரிய அன்பின் கடன். நமது செல்வத்திற்கு ஏற்ப, நாம் ஏழைகளுக்கு அதிக தாராளத்தோடு ஏற்கெனவே அவர்களுக்குரியதை, அவர்கள் மாண்புடன் நடத்தப்படும் உரிமைக்காகப் பகிர வேண்டும். ஏழைகள் நமது உதவி தேவைப்படுவோர் அல்லர்; படைப்பின் வளங்களில் இருந்து தங்கள் வாழ்வுக்கான உரிமை சமூகத்தால் பறிக்கப்பட்ட மக்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்களோடு பகிர்வதில், நாம் அவர்களுக்குச் சாதகமான உதவி செய்வதில்லை; அவர்களுக்கு உரிமையானதை நாம் அவர்களுக்கு திருப்பி வழங்குகிறோம்.

10. ஏழைகளை வாட்டும் ஏழ்மை என்பது வெறுமனே வளங்களின் குறைபாடு பற்றியதன்று. இது அவர்கள் பிழைக்கவும் செழிக்கவும் தேவையான வளங்களுக்காக தங்கள் திறன்களை வழங்கும் பங்கேற்றலுக்கு அவர்களை உட்படுத்தும் வலையங்கள் மற்றும் உறவுநிலைகளில்

இருந்து அவர்களை விலக்கி வைக்கிறது பற்றியதுமாகும். குறிப்பிட்ட குறைபாடுகளால் துன்புறும் மக்கள் சரியான வேலை வாய்ப்பின்றி விலக்கப்பட்டு, பொருளாதார ஏழ்மையால் துன்புறுவது இந்த மெய்மத்திற்கான ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

‘‘சோம்பலானோர்’’ மற்றும் ‘‘வளமற்றோர்’’ என்று ஏழைகளை மக்கள் கடந்து செல்வது மிக எளிதானது, இவ்வாறு ‘‘அவர்கள் தங்களிலேயே ஏழ்மையைக் காண்கின்றனர்’’. இத்தகைய தவறான காரணங்களால் வீழும் மக்கள், கடவுள் தங்கள் வழியில் அனுப்பும் ஏழைகளின் முக்கியத்துவத்தை உண்மையில் புறக்கணித்துள்ளதை அறிந்திருக்கும் பொழுது தங்கள் மனச்சான்றை வெறுமனே மட்டுப்படுத்த முயல்கின்றனர். நாம் ஏழைகளது வாழ்விலுள்ள இக்கட்டுகளை அறிந்திடப் போதிய முயற்சி செய்யாத பொழுது, நம்மால் அவர்களைப் பற்றிய நியாயமான முடிவுகளை எடுக்க முடியாது.

11. ஏழைகளுக்கு முன்னுரிமையைச் செயலாக்குவது என்பதற்கு நாம் எப்பொழுதும் வாழ்வை அவர்களின் கண்ணோட்டத்தில் காண வேண்டும் என்பது பொருளாகும். இதற்கு சமூகத்தால் மறக்கப்பட்டோர், விளிம்புநிலையினர், பாகுபடுத்தப்பட்டோர், மற்றும் விலக்கப்பட்டோரை எப்பொழுதும் கருத்தில் கொள்வது தேவையாகிறது. அத்தகைய மக்களிடம் இயேசு சிறப்பு கவனம் செலுத்தியதை நற்செய்திகளில் நாம் காண்கிறோம். அவர்களுக்கே அவர் விண்ணக அரசைக் கொணர்ந்தார். சமூகத்தில் ஏழைகளின் இருப்பு நமக்கு தொல்லையாகவும் தொந்தரவாகவும் இருக்கிறதால் மட்டுமே அவர்களை அகற்றுவதற்கு கிறிஸ்துவும் அவரது நற்செய்தியும் நம்மை அனுமதிப்பது இல்லை.

12. ஏழைகளுக்கான நமது அக்கறை வெறும் பரப்புரை அல்லது பருவம்சார் செயல்பாட்டிற்கு அதிகாமானதாக இருக்க வேண்டும். தனிநபர்களாக, குடும்பங்களாக, மற்றும் திருச்சபை குழுமங்களாக நாம் அவர்களை நமது வாழ்வில் ஒருங்கிணைப்பது தேவையாகிறது, அதனால் நாம் அவர்களின் இருப்பையும் தேவைகளையும் தொடர்ந்து கருத்தில் கொள்கிறோம். நமது அன்றாட கருதல்களில் அவர்கள் ஒரு பிற்சிந்தனையாக அன்றி, முன்னுரிமையாக முன்னதாக இருக்க வேண்டும்.

*லவ்தாத்தோ சீ*, 49: ‘‘பொதுவாக பேசினால், குறிப்பாக ஒதுக்கப்பட்டோரை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்த தெளிவான விழிப்புணர்வு சிறிதளவே இருக்கிறது என்பதைக் கூறியாக வேண்டும். இன்னும் அவர்களே பூகோளத்தின் கோடிக்கணக்கான மக்களின் தொகையில் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். இந்நாட்களில், அவர்கள் நாடுகளிடை அரசியல் மற்றும் பொருளாதார விவாதங்களில் குறிப்பிடப்படுகின்றனர், ஆனால் அவர்களின் பிரச்சனைகள் ஒரு பிற்சிந்தனையாகவே முன்கொணரப் பெறுகின்றன, இணைநிலை பாதிப்பு ஏற்படுமா என்பதில், கடமைக்காக அல்லது தொடர்புடைய விதத்தில் ஒரு கேள்வியாகச் சேர்க்கப்படுகிறது என்பதை ஒருவர் அடிக்கடி உணர்கின்றார். உண்மையில், எல்லாம் கூறப்பட்டு நிறைவேறியதும் அவை பெரிதும் கீழடுக்கிலேயே இருக்கின்றன. பல தொழிற்துறையினர், கருத்துரையாளர்கள், தொடர்பு ஊடகம் மற்றும் அதிகார மையங்கள், ஏழைகளிடம் இருந்து தொலைவிலும்,

அவர்களது பிரச்சனைகளோடு சிறிதே தொடர்பிலும் உள்ள வசதியான நகர் பகுதிகளிலேயே அமைந்துள்ளன என்பது இதற்கான பகுதியளவு காரணம். அவர்கள் உயர்மட்ட வளர்ச்சியின் வசதியான நிலையையும், உலகின் பெரும்பான்மை மக்களுக்கு எட்டாத தரமான வாழ்வையும் வாழ்ந்து கொண்டு காரணம் கற்பிக்கின்றனர். நமது நகர்களின் ஒருங்கிணைவுறா வேளைகளில் ஊக்குவிக்கப்படும், நேரடித் தொடர்பு மற்றும் சந்திப்பின் குறைபாடு, மெய்மையின் பகுதிகளை புறக்கணிக்கும் போக்குமுறை பகுப்பாய்வுகளுக்கும் மனச்சான்று மரத்துப்போதலுக்கும் இட்டுச் செல்லலாம். சில நேரங்களில் இந்த மனப்பாங்கு ‘பசுமை’ சொல்திறத்துடன் அருகருகே இருக்கிறது. எனினும், இன்று, உண்மை சூழலியல் அணுகுமுறை எப்பொழுதும் சமூக அணுகுமுறை ஆகிறது என்பதை நாம் உய்த்துணர வேண்டும்; மண்ணகத்தின் கூக்குரலையும் ஏழைகளின் கூக்குரலையும் கேட்க, அது சுற்றுச்சூழல் குறித்த விவாதங்களில் நீதி பற்றியக் கேள்விகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

*எவாஞ்செலீ கவ்தியும்*, 199: ‘‘முன்னேற்ற மற்றும் உதவி செயல்பாடுகளில் மட்டுமே நமது பொறுப்பு அடங்கி இருப்பதில்லை; தூய ஆவியார் நடத்துவது ஒழுங்கற்றச் செயல்பாடு அன்று, எல்லாவற்றுக்கும் மேலாக மற்றவரை ‘ஒரு குறிப்பிட்ட விதத்தில் நம்மோடு ஒன்றிணைந்தவர்களாக’ கருதுகின்ற கவனிப்புநிலை. இந்த அன்பான கவனிப்புநிலை என்னை அவர்களின் நன்மையை முனைப்புடன் நாடத் தூண்டும் உண்மை அக்கறையின் தொடக்கமாக இருக்கிறது. இது ஏழைகளை அவர்களின் நன்மைத்தனத்தில், அவர்களின் வாழ்க்கை அனுபவத்தில், அவர்களின் பண்பாட்டில், மற்றும் அவர்கள் விசுவாசத்தை வாழும் விதங்களில் பாராட்டை உரித்தாக்குகிறது. உண்மை அன்பானது எப்பொழுதும் சிந்தனைக்குரியது, மேலும் தேவைக்காக அல்லது வெறுமையில் அன்றி, அவன் அல்லது அவளது அழகிற்கு மேலாக வெறும் தோற்றங்களைத் தாண்டி மற்றவர்களுக்கு சேவையாற்ற நம்மை அனுமதிக்கிறது: ‘மற்றவரின் மகிழ்ச்சியில் நாம் காணும் அன்பு, அவருக்கு ஏதோவொன்றை இலவசமாக வழங்க நம்மை இட்டுச் செல்கிறது’. ஏழை மனிதர் அன்பு செய்யப்படும் பொழுது ‘பெருமதிப்பு உள்ளவராக மதிக்கப்படுகிறார்’, இது ஏழைகளுக்கு மற்ற எந்த கருத்தியலில் இருந்தும், ஒருவரது தனிப்பட்ட அல்லது அரசியல் நலனுக்காக சுரண்டும் எந்த முயற்சியில் இருந்தும் மாறுபட்ட வாய்ப்பை உருவாக்குகிறது. இந்த மெய்யான மற்றும் நேர்மையான நெருக்கத்தின் அடிப்படையில் மட்டுமே ஏழைகளின் விடுதலைப் பாதையில் நாம் சரியாக துணையிருக்க முடியும். இது மட்டுமே ‘ஒவ்வொரு கிறிஸ்தவக் குழுமத்திலும் ஏழைகள் இல்லத்தைப் போன்று உணர்வதை உறுதி செய்யும். இறையரசின் நற்செய்தியை வழங்கும் சிறந்ததும் பயனுள்ளதுமான அணுகுமுறையாக இது இருக்காதா?’ ஏழைகளுக்கு முன்னுரிமை அளிக்காமல், ‘நற்செய்தி அறிவித்தல், பிறரன்பின் முதன்மை வடிவமான அதையே, தவறாகப் புரிந்துகொள்ளும் அல்லது இன்றைய சமூகத் தொடர்பு சாதனங்களில் நம்மை அன்றாடம் விழுங்கும் வார்த்தைகளின் பெருங்கடலில் அமிழ்த்தும் ஆபத்தாகிறது’.’’

13. தத்தமது சொந்த தீமைகளைக் கொண்டுள்ள வல்லாட்சி ஆளுகைகளிலும் இலவசச் சந்தைகளிலும் வளங்கள் எவ்விதம் பயன்படுத்தப்பட்டு பகிரப்படுகின்றன என்பதை நாம்

கண்டுணர்வது தேவையாகிறது. வல்லாட்சி முறைமைகள் மக்கள் செய்கின்ற வேலைக்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்ளும் சமூக உரிமையை இழக்கச் செய்கின்றன. இலவசச் சந்தைகளில், மனிதருக்குத் தேவையான அனைத்தையும் பொருளாதாரச் செயல்பாட்டின் வழியாகப் பெற முடியாது என்பதை மக்கள் மறக்க நேரிடுகிறது. இரு முறைமைகளிலும், பொருளாதாரச் செயல்பாடு எல்லாம் மனிதகுலத்தின் பொது நலனையே முன்னிறுத்துகிறது என்பதை உறுதி செய்யும் சரியான முறைப்படுத்தல்கள் இருக்க வேண்டும். நாட்டின் மனச்சான்றில் மிக அவசியமான மற்றும் அவசர அறநெறி கோரிக்கையாக ஏழைகள் கருதப்பட வேண்டும்.

*கதிம 2425*: “நவீன காலங்களில் ‘பொதுவுடைமை’ அல்லது ‘சமூகவுடைமை’யோடு தொடர்புடைய வல்லாட்சி மற்றும் நாத்திகக் கருத்தியல்களைத் திருச்சபை நிராகரிக்கிறது. அவ்வாறே ‘முதலாளித்துவ’ நடைமுறையில் தனித்தியங்கல் மற்றும் மனித உழைப்பின் மீது சந்தை விதியின் முதன்மையையும் அது ஏற்க மறுக்கிறது. மையப்படுத்திய திட்டமிடலால் மட்டும் பொருளாதாரத்தை முறைப்படுத்துவது சமூகப் பிணைப்புகளின் அடிப்படையைப் பிறழச் செய்கிறது; சந்தை விதியால் மட்டும் அதை முறைப்படுத்துவதில் சமூக நீதி தவறுகிறது, ஏனெனில் ‘பல மனிதத் தேவைகளை சந்தையால் நிறைவுசெய்ய முடியாது.’ சந்தை மற்றும் பொருளாதார முயற்சிகளின் சரியான முறைப்படுத்தல், விழுமியங்களின் நீதியான படிமை மற்றும் தேவைப்படும் பொது நலனுக்காப் பார்வையில் அமைய வேண்டும்.”

14. படைப்பின் நெருக்கடி குறித்த அக்கறையும் இருக்க வேண்டும், இது மனிதர்கள் அனுபவிக்க கடவுள் படைத்துள்ள இயற்கை வளங்களைக் குறிக்கிறது. படைப்பின் மீதான நமது அக்கறை படைப்பின் நலனுக்காக அன்று, மாறாக, இயற்கை மற்றும் அதனுள் அடங்கிய எல்லா வளங்களையும் யாருக்காக கடவுள் படைத்தாரோ அந்த மனிதகுலத்தின் நலனுக்காகவே வெளிப்படுகிறது. படைப்பை அளவின்றிச் சுரண்டுவது, இந்த இயற்கை வளங்களை மனிதர்கள் நடுவே இந்த தலைமுறையினரும் வரவிருக்கும் தலைமுறையினரும் அனுபவிக்கும் உரிமையை இழக்கச் செய்கிறது. இயற்கையைச் சுரண்டுதல் என்பது நமது உடன் மனிதர்களைச் சுரண்டுவதாகும்.

*எவாஞ்செலீ கவ்தியும்*, 215: “பொருளாதார ஆர்வங்கள் அல்லது பாகுபாடற்றச் சுரண்டலின் இரக்கத்தைச் சார்ந்தே மற்ற வலுவற்ற மற்றும் பாதுகாப்பற்ற உயிரினங்கள் இருக்கின்றன. நான் படைப்பு முழுவதையும் பற்றி பேசுகிறேன். மனிதர்களாகிய நாம் பயனடைவோராக மட்டுமின்றி, மற்ற படைப்புயிரிகளின் பொறுப்பாளர்களாகவும் இருக்கின்றோம். நமது உடல்களுக்கு நன்றி, நம்மைச் சுற்றியுள்ள உலகிற்கு நெருக்கமாக கடவுள் நம்மை இணைத்துள்ளதால், மண்ணை மலடாக்குவதை ஓர் உடல்சார் நோயாகவும், உயிரினங்களின் அழிவை ஒரு வலிமிகு சிதைவாகவும் நம்மால் உணர முடிகிறது. நமது சொந்த வாழ்வையும் வருங்காலத் தலைமுறையினரையும் பாதிக்கும் அழிவு மற்றும் சாவின் பாதையை நமது கண்முன்னே நாம் விட்டுச் செல்ல வேண்டாம்.”

*லவ்தாத்தோ சீ*, 117: "ஒரு ஏழையின் மதிப்பின் மெய்மையின் பகுதியை நாம் ஒப்புக்கொள்ள தவறும் பொழுது ...இயற்கையின் கூக்குரலைக் கேட்பது நமக்கு கடினமாகிறது; அனைத்தும் இணைந்துள்ளன."

*லவ்தாத்தோ சீ*, 159: "பொது நலன் என்ற கருத்து வருங்காலத் தலைமுறையினருக்கும் விரிவடைகிறது. பூகோள பொருளாதார நெருக்கடிகள் நமது பொது விதியை புறக்கணித்ததன் தீங்கிழைக்கும் விளைவுகளை வலியுடன் தெளிவாக்கி விட்டன, நமக்கு பின்னால் வருவோரும் அவற்றைத் தவிர்க்க முடியாது. தலைமுறைகளுக்கு இடையிலான ஒத்துணர்வை விலக்கி வைத்துவிட்டு நீடித்திருக்கும் முன்னேற்றம் குறித்து நாம் ஒருபோதும் பேச முடியாது. வருங்காலத் தலைமுறையினருக்கு நாம் விட்டுச் செல்லும் உலகம் குறித்து நாம் சிந்திக்கத் தொடங்கும் பொழுது, பொருட்கள் மீதான நமது பார்வை மாறுபடுகிறது; இந்த உலகம் நாம் இலவமாகப் பெற்றுள்ளக் கொடை, அதை மற்றவர்களோடுப் பகிர வேண்டும் என்பதை நாம் உய்த்துணர்கிறோம். இந்த உலகம் நமக்கு வழங்கப்பட்டுள்ளதால், அதன் விளைதிறனும் உற்பத்தியும் முற்றிலும் நமது தனிப்பட்ட நன்மைக்கானது என்பதால், பயன்பாட்டு வழியிலான மெய்மையாக ஒருபோதும் நாம் பார்க்க முடியாது. தலைமுறைகளிடை ஒத்துணர்வு என்பது விருப்பத்தெரிவு அன்று, மாறாக நீதிக்கான ஒரு அடிப்படை கேள்வி, ஏனெனில் நாம் பெற்றுக் கொண்டுள்ள உலகம் நம்மைப் பின்தொடர்வோருக்கும் உரியது... 'பெறுதலுக்கான ஏரணத்தின் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் இருக்கிறது. அது ஒவ்வொரு தலைமுறைக்கும் கடனாக இருக்கிறது, அதை அடுத்ததிடம் ஒப்படைக்க வேண்டும்'. இந்த பரந்த பார்வையால் ஒருங்கிணைந்த சூழலியல் குறிக்கப்படுகிறது."

15. படைப்பைச் சுரண்டுவதால் எழும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்து நாம் பேசும் பொழுது, நாம் பூகோளத்தின் முறைமைகளான காற்று, நீர், மற்றும் மண்ணோடு உள்ள பிரச்சனைகளைச் சுட்டுகிறோம், அவை மனிதர்களால் பூகோளம் தவறாக நடத்தப்படுவதன் விளைவாக எழுந்துள்ளன. நமது உலகம் தற்போது தீவிரமான சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது, ஏனெனில் இந்த பிரச்சனைகள் நமது தலைமுறைக்கும், வரவிருக்கும் தலைமுறைக்கும் எப்போதை விடவும் இயற்கைக்கு மாறான பேரழிவுகளையும் இடர்களையும் ஏற்படுத்தும். மனிதர்கள், தாவரங்கள், மலைகள், பனிப்பாறைகள், வளிமண்டலம், பாறைகள், கடல்கள், மற்றும் பெருங்கடல்களை உள்ளடக்கிய நமது சூழல் மண்டலத்தை நவீன முன்னேற்றங்கள் பாதித்துள்ளன. நீர், மின்னூட்டம், நெருப்பு, காந்தப்புலம், காற்று, மற்றும் காலநிலையையும் சூழல் மண்டலம் உள்ளடக்கியுள்ளது. நவீனத் தொழிற்சாலைகள் இந்த சூழல் மண்டலத்தில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

அத்தகைய முன்னேற்றங்கள் மனிதச் சுற்றுச்சூழலுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன, அந்த சுற்றுச்சூழல் பிரச்சனைகளின் பட்டியல் இங்கே தரப்படுகிறது:

*க) காற்று, நீர், மற்றும் நில மாசுபாடு.* எண்ணெய் கசிவு, தெருக்களில் ஓடி கடலில் கலக்கும் மாசுற்ற நீர், மற்றும் கடலில் குப்பைகளைக் கொட்டுவதால் நீர் மாசுபாடு ஏற்படுகிறது. படிவ

எரிபொருள்கள், நீர்முத்த நொறுக்கல், மற்றும் வாகனங்கள் வெளியிடும் வாயுக்களால் காற்று மாசுபாடு ஏற்படுகிறது. தொழிற்சாலை கழிவுகளால் நீரும் நிலமும் பெரிய அளவில் மாசுபடுகின்றன.

*ங) காலநிலை மாற்றமும் நெருக்கடியும்.* புவி வெப்பமாதல், பசுமையில்ல விளைவு, நகரிய வெப்பம், மற்றும் நிலக்கரி தொழிற்சாலை போன்ற மனிதச் செயல்பாடுகளால் பெரிதும் இன்று காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது வானிலையை மிகத் தீங்கிழைக்கும் விதத்தில் மாற்றியுள்ளது. துருவப் பகுதிகளில் உள்ள பனி உருகுகின்றன, புதிய மற்றும் தொற்று நோய்கள் உருவாகின்றன, மேலும் மனித வாழ்வுக்கு அவசியமான சில தாவரங்கள் எப்போதும் வளர முடியாத நிலை ஏற்படுகிறது.

*ச) புவி வெப்பமாதல்.* கார்பன் டையாக்சைடு, மீத்தேன், நீராவி போன்ற பசுமையில்ல வாயுக்களின் விளைவால் பூகோளத்தின் சராசரி வெப்பநிலை கடந்த நூற்றாண்டில் 0.8 டிகிரி அதிகரித்துள்ளது. இந்த வாயுக்கள் பசுமையில்ல விளைவை ஏற்படுத்தக் கூடிய வெப்பத்தை தக்கவைக்கும் திறனைக் கொண்டுள்ளதால், இந்த புவியில் வாழும் மக்களுக்கு தொடர்ந்து வெப்பமாக உள்ளது. இந்த வாயுக்கள் இல்லையெனில், இப்புவி வாழ இயலாத அளவுக்கு குளிர்ந்துவிடும். எனினும், பசுமையில்ல வாயுக்களின் அளவு விரைவாக அதிகரித்து வருவது, வளிமண்டலத்தில் அதிக வெப்பத்தை தக்கவைத்து, இந்த வாயுக்களில் சில விண்வெளிக்கு வெளியேறுகின்றன. இந்த வாயுக்கள் புவியின் நிலப்பரப்பை சூடாக்குவதன் விளைவாக புவி வெப்பமாதல் நிகழ்கிறது.

*ஞ) காடழிப்பும் அடைப்பும்.* மக்களின் நுகர்வுசார் பழக்கங்களால், பொருட்களை வாங்குவதும் விற்பதும் கடந்த சில பத்தாண்டுகளில் மூன்று மடங்காகியுள்ளது, இந்த தேவை தொடர்ந்து அதிகரிக்கிறது. இதன் விளைவாக, ‘‘காடழிப்பு’’ நேரடியாக நடைபெறுவதை நாம் கண்டுணர்ந்து வருகிறோம். காடழிப்பு என்றால், வேளாண்மை, தொழிற்சாலை, அல்லது நகர் பயன்பாட்டுக்காக காடுகளை அல்லது மரங்களை அகற்றுவதாகும். வீட்டுமனை, வணிகம் அல்லது தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நிலத்தைப் பெறுவதற்காக காட்டினை முற்றிலும் அழிப்பதும் இதில் அடங்கும். ஒவ்வோர் ஆண்டும் 18 மில்லியன் ஏக்கர் (அல்லது 7.3 மில்லியன் ஹெக்டேர்) பரப்பளவுள்ள காடுகள் அழிக்கப்படுவதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு தெரிவிக்கிறது. காடழிப்பின் நீண்டகால விளைவுகள் தீவிர ஆபத்தாகவும் எச்சரிக்கை விடுப்பதாகவும் இருக்கலாம், அவை வெள்ளம், மண்ணரிப்பு, புவி வெப்பமாதல், காலநிலை சமனின்மை, வனவாழ்வு முடிவு, மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை ஏற்படுத்தும்.

*ட) தொழிற்சாலை மற்றும் வீட்டுக் கழிவு.* ஒவ்வோர் ஆண்டும் டன்கள் கணக்கான குப்பைகள் ஒவ்வொரு வீட்டிலும் உற்பத்தியாகின்றன. மறுசுழற்சி செய்ய முடிந்த குப்பைகள் அருகிலுள்ள மறுசுழற்சி ஆலைகளுக்கு அனுப்பப்படுகின்றன, ஆனால் மறுசுழற்சி செய்ய முடியாத மற்றவை குழிகளை நிரப்ப அல்லது புதைநிலங்களாக விளங்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஆயினும், அரசுகள் அதிகமதிகமாக உற்பத்தி செய்யவும், குடிமக்கள் அதிகமதிகமாக வாங்கவும் தொடர்ந்து தமது பொருளாதாரத்தை தூண்டுகின்றன, இறுதியாக இன்னுமதிக குப்பை உற்பத்தியாகிறது. இந்த குப்பைகளைக் கொட்டுவதற்காக உருவாக்கப்படும் இடங்கள் மனிதரின் நலவாழ்வைப் பாதிக்கின்றன, மண்ணின் தரத்தைக்

கெடுக்கின்றன, வனவாழ்வைப் பாதிக்கின்றன, காற்று மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன, மற்றும் காலநிலை மாற்றமும் விளைகிறது.

*ண) அமில மழை.* தொழிற்சாலை செயல்பாடுகளால் வளிமண்டலத்தில் கலந்துள்ள மாசுபடுத்திகள், நிலத்தில் பொழியும் மழை (அல்லது பனி) அமிலத்தன்மை கொண்டதாக மாறுகிறது. சல்பர் டையாக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடுகளை வெளியிடும் படிம எரிபொருட்களை எரித்தலின் வழியாகவும் இது ஏற்படுகிறது. அமில மழை பதிலுக்கு, எரிமலை வெடிப்பு, தாவரங்கள் கருகுதல், சல்பர் டையாக்சைடைக் கடலில் கலத்தல், மற்றும் பாக்டீரிய சிதைப்பு போன்றவற்றைச் செய்கிறது. நீரில் வாழ்கிறவை, காடுகள், மற்றும் மனித நலவாழ்வு மீதான இதன் விளைவுகள் ஆபத்தானவை.

*த) ஓசோன் படல அழிப்பு.* புவியின் நிலப்பரப்பிற்கு மேல் 20 முதல் 30 கிலோமீட்டரில் உள்ள முக்கியமாக ஓசோனைக் கொண்டுள்ள வாயு அடுக்கே ஓசோன் படலமாகும், இது தீங்கிழைக்கும் புறஊதா கதிர்கள் புவியில் நுழையாமல் தடுக்கிறது. இப்படலம் கதிரவனால் வெளியேற்றப்படும் புறஊதா கதிர்களில் 95 முதல் 99 விழுக்காட்டை உறிஞ்சிக் கொள்ளும் திறனுடையது. தொழிற்சாலை செயல்பாடுகள் தற்போது ஓசோன் படலத்தை குறிப்பிடத்தக்க அளவு குறைத்து, புறஊதா கதிர்களில் இருந்து மக்கள் பெறும் பாதுகாப்பை குறைத்துள்ளன.

*ந) மரபியல் பொறியியல்.* உற்பத்தியை அதிகரிக்க உணவு மற்றும் விலங்குகளை மரபணு மாற்றம் செய்கின்றன. ஒவ்வாமைகள், சுற்றுச்சூழல் நலிவு, மற்றும் பூச்சிகளின் எதிர்ப்புத்திறன் வளர்ச்சி போன்ற தீவிரமான பின்விளைவுகளை இந்த முறைகள் மனிதர்களுக்கு ஏற்படுத்தும்.

*ப) நகர் மயமாக்கல்.* தொழிற்சாலைகள், நகர்கள், வணிகப் பகுதிகள், மற்றும் வாழ்விட வளர்ச்சித் திட்டங்களுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. இந்த செயலால் விலங்குகளும் பறவைகளும் பாதுகாப்பின்றி முற்றிலும் அழிந்து போகின்றன. இந்த செயல்பாடுகளின் நீண்ட தாக்கம் மனிதர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கிழைப்பதாக இருக்கும்.

*ம) எண்ணெய் கசிவு.* திரவ பெட்ரோலியம் கடலில் கசியும் பொழுது, கடல்சார் சூழல் மோசமாகப் பாதிக்கப்படுகிறது. எண்ணெய் கசிந்து பல ஆண்டுகள் கழித்தும், அதன் தாக்கம் தொடரலாம். கடந்த சில ஆண்டுகளில் நிகழ்ந்த எண்ணெய் கசிவுகள் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும், எதிர்காலத்தில் அத்தகைய நிகழ்வுகள் நேராமல் தடுக்கும் முயற்சிகள் இதுவரை எடுக்கப்படவில்லை.

*ய) நீரழுத்த நொறுக்கல்.* நிலத்தடியில் இருந்து வாயு எடுப்பதற்காக, பெருமளவு நீரையும், மணலையும் வெளியேற்றி, வேதிப்பொருட்களை நிலத்தடியில் செலுத்தி பாறையை உடைக்கத் தேவையான அழுத்தம் ஏற்படுத்துவதே நீரழுத்த நொறுக்கல் எனப்படும். இந்த நொறுக்கலால் நீர் மாசுபாடு அதிகரிக்கும், வறட்சியின் எண்ணிக்கை அதிகரிக்கும், நச்சுகள் பரவும், மேலும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் மீதான கவனம் குறையும்.

*ர) இயற்கை வளத்தின் அழிப்பு.* அதிக பெட்ரோலியத்தை எடுத்து பயன்படுத்த அல்லது மற்ற நாடுகளுக்கு விற்பதற்காக பெட்ரோலிய தொழிற்சாலை புவியோட்டை அகழ்கிறது. இத்தகைய ஆற்றல் வளங்கள் வரம்புக்குரியவை, தற்போதைய தேவையைத் தாண்டி சுரண்டுவது காற்று மாசுபாடு மற்றும் புவி வெப்பமாதலின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும். இதைப் போன்ற புதுப்பிக்கவியலா வளங்கள் தற்போதில் இருந்து 50 ஆண்டுகளுக்குள் அழிந்துபோகும் என்று வல்லுநர்கள் கணித்துள்ளனர். ஆயினும், லாபத்தின் மீதான பேராசையால் எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து கொள்ளையிடுகின்றன.

*ல) பாலைநிலமாக்கல்.* பொறுப்பற்ற வேளாண் செயல்பாடு அல்லது காடழிப்பின் விளைவாக வளமையான நிலம் பாலைநிலமாக மாறுவதை பாலைநிலமாக்கல் எனப்படும். இது வெள்ளம், பஞ்சம், ஏழ்மை மற்றும் தரமற்ற நீரை உருவாக்கும்.
*வ) வாழ்விட இழப்பும் அழிவும்.* நச்சுகள் காற்று, நீர், மற்றும் நிலத்தின் தரத்தை மாற்றுவதன் காரணமாக, மாசுபாடு வாழ்விடங்கள் அழியக் காரணமாகிறது. வாழ்விடங்கள் அழியும் பொழுது, விலங்குகளும் தாவரங்களும் அழிவுறவோ அல்லது இடம்பெயரவோ நேரிடும். இந்த மாசுபாடு நிலத்தடி நீரின் தன்மையைக் கெடுத்து, மண்ணின் சேர்க்கை மற்றும் தரத்தை மாற்றுகிறது.
*ழ) நீர் தட்டுப்பாடு.* மனிதச் செயல்பாட்டின் விளைவாக நீர் மாசுபட்டுள்ளது. இதன் காரணமாக, தெளிந்த குடிநீர் கிடைக்காமல் மனிதர்களும் விலங்குகளும் தட்டுப்பாட்டைச் சந்திக்க நேரிடுகிறது. உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினருக்கு தெளிந்த குடிநீர் கிடைக்கவில்லை என்று உலக நலவாழ்வு நிறுவனம் கூறுகிறது.

16. உலகில் மக்கள்தொகை அதிகம் பெருகிவிட்டதாக கூறும் ஒரு வெகுமக்கள் இயக்கம் இருக்கிறது. கருத்தடை மற்றும் கருக்கலைப்பைப் பயன்படுத்தி மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த இந்த இயக்கம் பரப்புரை செய்கிறது, உலகின் “மக்கள் பெருக்கம்” என்று கூறப்படுவதற்கு பற்றாக்குறையான இயற்கை வளங்களை உலகில் உள்ள எல்லா மனிதரும் பகிர வேண்டும் என்பதே காரணமாகும்.

உண்மை என்னவெனில், மக்கள் பெருக்கம் என்பது ஒரு கட்டுக்கதை. நாம் பொறுப்புள்ள விதத்தில் வளங்களைப் பயன்படுத்தினால் ஒவ்வொருவரும் எப்பொழுதும் பகிர்வதற்கு அவை போதுமானவை. இந்த உலகம் 10 பில்லியன் (ஆயிரம் கோடி) மக்கள் பசியாறப் போதுமான உணவை உற்பத்தி செய்கிறது, ஆனால் இங்கு 7 பில்லியன் (700 கோடி) மக்கள் மட்டுமே இருக்கின்றனர். உலகின் சில பகுதிகளில் உள்ள மக்கள் பசியால் வாடுகின்றனர் என்பது உண்மையாக இருந்தாலும், இந்த பசி உணவு அல்லது வளங்களின் பற்றாக்குறையால் ஏற்படவில்லை. இது அரசியல், பொருளாதார, மற்றும் இறுதியாக, அறநெறி தவறுகளால் ஏற்படுகிறது.

நவீனமயமாக்கலால் இனப்பெருக்க விகிதங்கள் குறைந்து வருவது உண்மையாக இருக்கிறது. மக்கள் பண்ணைகளில் இருந்து நகர்களுக்கு நகரும்போது, அவர்கள் சில குழந்தைகளையே வளர்க்க முடிகிறது. பண்ணைகளில் அல்லது வயல்களில் உள்ள மக்கள் தங்களுக்கு வேளாண் செயல்பாடுகளில் உதவுவதற்காக அதிக குழந்தைகளைப் பெறுகின்றனர். பெண்கள் அதிகம் கற்றோராய் ஆனதும், அவர்களும் தங்கள் வேலைகளில் மிக கவனம் செலுத்துவது, அவர்களில் பலரும் திருமணத்தைத் தள்ளிப்போட்டு, தாமதமாக குழந்தைகள் பெறுகின்றனர்; இதனால் அவர்கள் முற்காலப் பெண்களை விட குறைவான குழந்தைகளைக் கொண்டுள்ளனர்.

இன்று, உலகில் உள்ள 80க்கும் மேற்பட்ட நாடுகள் இறப்பு விகிதங்களுக்குச் சமமாக பிறப்பு விகிதங்களால் மக்கள்தொகையை உருவாக்கவில்லை. சில ஆப்ரிக்க நாடுகளைத் தவிர

உலகில் ஒவ்வொரு நாடும், அடுத்த இருபதாண்டுகளுக்குள் மக்கள்தொகையை மறுநிரப்பல் செய்யப்போவதில்லை, இது ஒரு தீவிரப் பிரச்சனை என்று ஐக்கிய நாடுகள் கணித்துள்ளது. உலக மக்கள் முதிர்வடைந்து கொண்டிருக்கின்றனர், முதியோருக்கு உதவப் போதுமான இளையோர் இல்லாத பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதே இதன் பொருள்.

ஆகவே, உலக மக்கள் இன்று எதிர்கொள்ளும் குழப்பம் மக்கள்பெருக்கம் பற்றியதன்று. மாறாக, நாம் வாழும் விதத்தையும் மனித சமூகமாக நாம் தழுவும் விழுமியங்களையும் தெரிவு செய்வதில் அந்த குழப்பம் உள்ளது.

*லவ்தாத்தோ சீ*, 205: ‘‘இன்னும் எல்லாம் இழக்கப்படவில்லை. மனிதர்கள், மோசமானதற்குத் திறனுள்ளவர்கள் என்றாலும், தங்களை மேலெழுப்பவும், நல்லதை மீண்டும் தேர்ந்தெடுக்கவும், மேலும் தங்கள் மனத்தின் மற்றும் சமூகத்தின் நிலைப்பாட்டைத் தாண்டி, ஒரு புதிய தொடக்கத்தை உருவாக்கவும் திறனுள்ளவர்கள். நம்மையே நேர்மையாகப் பார்க்க, நமது ஆழ்ந்த நிறைவின்மையை ஒப்புக்கொள்ள, மற்றும் அதிகாரப்பூர்வ விடுதலைக்கான புதிய பாதைகளில் புறப்படவும் நம்மால் இயலும். நன்மை, உண்மை மற்றும் அழகுக்கான நமது திறந்தநிலையை, அல்லது நமது இதயங்களில் ஆழமாகச் செயலாற்றும் கடவுளின் அருளுக்கு பதிலிறுக்க நமக்கு அவர் வழங்கியத் திறனை எந்த முறைமையும் முழுவதுமாக அடக்க முடியாது. நமக்குரிய இந்த மாண்பை மறந்துவிடக் கூடாது என்று உலகெங்கும் உள்ள ஒவ்வொருவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இதை நம்மிடம் இருந்து எடுத்துக் கொள்ளும் உரிமை எவரிடமும் இல்லை.’’